# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 603/2016/TPT-2

ஆணை எண்: 78/2017

நாள்: 27/04/2017

திரு. வேலு. ஜெயச்சந்திரன்,
நேமம் சாலை, பசுமை இல்லம்,
பள்ளிப்பேட்டை கிராமம்,
அச்சிறுப்பாக்கம் 603 301,
காஞ்சிபுரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

திருமதி. தாவுத் பி உசேன்,
முன்னாள் தலைவர்,
அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி, நேமம் சாலை, பள்ளிப்பேட்டை, அச்சிறுப்பாக்கத்தில் வசிக்கும் திரு. வேலு ஜெயச்சந்திரன் அவர்களின் 11.5.2016 நாளிட்ட முறையீட்டு மனு 15.6.2016 நாளிட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் எண்.6316/2016/இ2 மூலம் இம்முறைமன்றத்தில் பெறப்பட்டு 603/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற் குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. வேலு ஜெயச்சந்திரன் என்பவர் தமது முறையீட்டு மனுவில் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்

திருமதி. தாவுத் பி உசேன் அவர்கள் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள "மார்கழி நகர்" என்ற வீட்டு மனைப் பிரிவில் மனைகளை விற்பதற்கும், பத்திரப் பதிவு செய்வதற்கும், தடையில்லை என்பதற்கான தடையில்லாச் சான்றினை 11.01.2014 நாளிட்ட கடிதத்தில் வழங்கியுள்ளார். மேற் குறிப்பிட்ட தடையில்லாச் சான்று அலுவலக ரீதியாக வழங்காமல் லாப நோக்கத்துடன் தன்னிச்சையாக பேரூராட்சி மன்றத் தலைவரால் வழங்கப்பட்டது. சட்ட விதிகளுக்கு முரணானது எனத் தெரிவித்து, முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி தாவுத் பி உசேன் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து 10.11.2016 அன்று முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. அரசு விதிகளின்படி, நில விற்பனைக்கு தடையில்லா சான்று வழங்க இயலாது என செயல் அலுவலர் 29.4.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதாக விசாரணையின் போது குறிப்பிட்டார். எதிர் மனுதாரரான முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர், இலாபம் அடையும் நோக்கிலேயே சட்டத்திற்குப் புறம்பாக மேற்படி தடையில்லா சான்றினை வழங்கியுள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார்.

3. அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களிடமும் 7.12.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட வீட்டு மனைப் பிரிவுக்கு செங்கல்பட்டு, நகர் மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநரால் மட்டுமே அங்கீகாரம் வழங்க இயலும் என்றும் பேரூராட்சி மன்றத் தலைவரால் தடையில்லா சான்று வழங்க இயலாது என விசாரணையின் போது தெரிவித்தார். பேரூராட்சி மன்றத் தலைவர் வழங்கிய தடையில்லாச் சான்றிதழின் அடிப்படையிலேயே பொது மக்களும் அங்கீகாரம் இல்லாத வீட்டு மனைகளை வாங்கி பதிவு செய்துள்ளனர். பேரூராட்சி மன்றத் தலைவரின் இச்செயல், பொது மக்களை ஏமாற்றி மோசம் செய்ததுடன், பணம் பெறும் நோக்கிலேயே தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் போது குறிப்பிட்டார். அங்கீகாரம் இல்லாத மார்கழி நகர் மனைப் பிரிவில் 7 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் சுமார் 4 ஏக்கர் இருக்குமென நினைப்பதாகவும் தெரிவித்தார்.

25.01.2017 அன்று எதிர் மனுதாரரும் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவருமான தாவுத் பி உசேன் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 11.1.2014 நாளிட்ட கடிதத்தில் எந்தவித தடையில்லாச் சான்றிதழும் தன்னால் வழங்கப்படவில்லை என்றும், தனக்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்க அதிகாரம் இல்லை என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். எனினும் தடையில்லா சான்றிதழ் உள்ள லெட்டர் பேட் மற்றும் அலுவலக முத்திரை தன்னுடையது

என்றும் அதில் உள்ள ஆங்கில கையொப்பம் தன்னுடையது இல்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். தான், தமிழில் கையொப்பம் இடும் வழக்கத்தினைக் கொண்டுள்ளதாகவும் தன்னுடைய லெட்டர் பேட் மற்றும் அலுவலக முத்திரை தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், 2006 முதல் 2011 வரை பேரூராட்சி துணை தலைவர் பதவியில் இருந்திருக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், 119, அச்சிறுப்பாக்கம் கிராமத்தில் கிராம புல எண்கள் 306/3B 306/4 மற்றும் பிற புல எண்களில் (மொத்தம் 20 புல எண்களில்) 15.95 ஏக்கர் நிலப்பரப்பில் வீட்டு மனைகள் ஏற்படுத்தப்பட்டு "மார்கழி நகர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வீட்டு மனை நகரில், மனைகளை விற்பனை செய்வதற்கும், பத்திரப் பதிவு செய்வதற்கும் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என எதிர்மனுதாரரான, அச்சிறுப்பாக்கம் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் 11.1.2014 அன்று தனது லெட்டர் பேடில் சான்று அளிக்கப்பட்ட விவரம் புகைப்பட நகல் முறையீட்டு மனுதாரரால் வழங்கப்பட்டுள்ளது. அச்சான்றிதழில் பேரூராட்சி மன்றத் தலைவரின் கையொப்பம் ஆங்கிலத்தில் இடப்பட்டுள்ளதுடன் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற அலுவலக முத்திரையையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அச்சான்றிதழில் பெரியசாமி பழனி என்ற வழக்குரைஞர், நோட்டரி பப்ளிக் என்ற முறையில் கையொப்பமிடாத முத்திரையையும் பதியப்பட்டுள்ளது. நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரகத்தின் அனுமதியில்லாமல் ஏற்படுத்தப்பட்ட மேற்படி மனைப் பிரிவில் எதிர்மனுதாரரான பேரூராட்சி மன்றத் தலைவர் வழங்கிய தடையில்லா சான்றிதழின் அடிப்படையிலேயே மனைகளை வாங்கிய 7 நபர்கள் வீடுகளை கட்டியுள்ளனர் என்று அப்பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தடையில்லாச் சான்றிதழ் வழங்கிய அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்றத் தலைவர் தனது லெட்டர் பேட் மற்றும் அலுவலக முத்திரையை தவறாகப் பயன்படுத்தி தன் பெயருக்கு தீங்கு விளைவித்திருக்கிறார்கள் என்றும் தடையில்லா சான்றிதழில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் தனக்கு ஆங்கிலத்தில் கையொப்பமிடும் வழக்கம் இல்லை எனவும் மேற் கூறப்பட்ட அன்னாரது 25.1.2017 தேதியிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவரான எதிர் மனுதாரர், தனது லெட்டர் பேடில் உள்ள தடையில்லா சான்றிதழை தன்னால் வழங்கப்படவில்லையென மறுத்துள்ளார். எனினும், அச்சான்றிதழின் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் வகையில் நோட்டரி பப்ளிக் கையொப்பமிடாத முத்திரை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்நேர்வில் எதிர்மனுதாரர் கையொப்பமிட்டதை மறுக்க இயலாது. இச்சான்றிதழின் அடிப்படையிலேயே, பொதுமக்களும் மேற்குறிப்பிட்ட வீட்டுமனைப் பிரிவில் மனைகளை வாங்கி வீடுகளைக் கட்டியுள்ளனர். தனது லெட்டர் பேடையும் அலுவலக முத்திரையையும் தவறாகப் பயன்படுத்தி, போலியாக

கையொப்பமிட்டு தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர் கருதினால், அதனை மெய்ப்பிக்கும் வகையில் தான் குற்றமற்றவர் என நிரூபிக்கவில்லை. அதற்குரிய முயற்சியும் அவரால் செய்யப்படவில்லை. இந்நிலையில் முறையீட்டு மனுதாரரின் புகாரில் உண்மைத் தன்மை இல்லையென ஒதுக்கிவிட இயலாது. எனவே, இந்நேர்வில் எதிர் மனுதாரரான, அச்சிறுப்பாக்கம் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் H. தாவுத் பி உசேன் அவர்கள் 11.1.2014 அன்று தடையில்லாச் சான்று வழங்கிய உண்மை தன்மையை கண்டறிய உரிய குற்றவியல் நடவடிக்கை தொடர நடவடிக்கை மேற்கொள்ளும்படி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை – 600 108.

2. திரு. வேலு ஜெயச்சந்திரன்,
நேமம் சாலை, பசுமை இல்லம்,
பள்ளிப்பேட்டை கிராமம்,
அச்சிறுப்பாக்கம் 603 301,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3. திருமதி. தாவுத் பி உசேன்,
முன்னாள் தலைவர்,
அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

4. செயல் அலுவலர்,
அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி,
அச்சிறுப்பாக்கம் - 603 301.

5. உதிரி நகல்கள் – 5